6th May 1957]

THE HON. SRI C. SUBRAMANIAM : I think there is another similar motion.

MR. SPEAKER : That has been withdrawn.

THE HON. SRI C. SUBRAMANIAM : Just a few minutes before, I saw notice of the motion in your Chamber. This may be taken up to-morrow for consideration as to whether it is admissible and, if so, what further action should be taken.

MR. SPEAKER : I suppose the hon. Leader of the Opposition has no objection.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : I have no objection. In that case, I suppose I can have my say to-morrow.

MR. SPEAKER : Yes. The motion will be taken up to-morrow.

III.—TIME-LIMIT FOR DISCUSSION.

MR. SPEAKER : I had a discussion with the hon. Leaders of Parties and the Members of the Business Advisory Committee to decide how we should proceed with the discussion to-day. We have all agreed that the following should be the arrangement.

இப்பொழுது 11 மணிக்கு மேலாகிவிட்டது. $11\frac{1}{4}$ மணியிலிருந்து 12 மணி வரை 6 அங்கத்தினர்கள் பேசவேண்டியிருக்கிறது. ஆதலால் தயவு செய்து ஒவ்வொரு அங்கத்தினரும் 5 நிமிட நேரமே பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் பின்னால் 12 மணியிலிருந்து 12–20 வரை சோஷியலிஸ்டு கட்சி தலைவர் ஸ்ரீ. பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் பேசுவார். 12–20 முதல் 12–40 வரை ஸ்ரீ. சின்னத்துரை அவர்கள் பேசுவார். 12–40 முதல் 1 மணி வரை ஸ்ரீ. கல்யாணசுந்தரம் அவர்கள் பேசுவார். பின்னால் 1 மணி முதல் 1–30 மணி வரை ஸ்ரீ. அண்ணாத்துரை அவர்கள் பேசுவார். 1–30 முதல் 2 மணி வரை ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் பேசுவார். சாதாரணமாக இந்த சபை $1\frac{1}{2}$ மணிக்குக் கலைய வேண்டும். இன்றைக்கு 2 மணி வரை கூடி இந்தத் தலைவர்களுக்கு எல்லாம் பேசுவதற்கு இடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாளைக்கு 11 மணிக்கு சபைக் கூடும். அப்பொழுது அரசாங்கத்தின் சார்பில் நிதி அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள். இது எல்லா அங்கத்தினர்களுக்கும் சம்மதம்தான் என்று நினைக்கிறேன்.

SRI P. G. MANICKAM : ஸார், ஒரு பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். ஸார், ஒரு விஷயம் அறியவிரும்புகிறேன். அதாவது இந்த சட்டசபையிலுள்ள பிரதிநிதிகளுடைய பேச்சுக்களை அறிவதற்காக பொது மக்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் ஒவ்வொரு அங்கத்தினர்களுக்கும் பேசுவதற்குள்ள பேச்சு சுதந்திரம் வழங்குவது சபாநாயகருடைய கடமை. கழிந்த இரண்டு நாட்களாக கவர்னர் பெருமான் உரை மீது நடந்த விவாதத்தில் மொத்தம் 42 அங்கத்தினர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள். அதில் காங்கிரஸிலிருந்து 21 பேரும், கா. சீ. க. விலிருந்து 8 பேரும் திராவிட முன்னேற்ற கழகத்திலிருந்து 9 பேரும், கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து 2 பேரும் சோஷியலிஸ்டு கட்சியிலிருந்து 2 பேரும், சுயேச்சை அங்கத்தினர்களில் 2 பேரும் பேசினார்கள். இந்திய அரசியல் சட்டத்தின்படி எல்லா அங்கத்தினர்களுக்கும் பேச்சு சுதந்திரம் அளிக்க வேண்டியது நியாயம். அது மாத்திரமல்ல, ஒவ்வொரு

[Sri P. G. Manickam] [6th May 1957

கட்சிக்கும் அவர்களுடைய எண்ணிக்கைக்கு தகுந்தபடி பேசுவதற்கு நேரம் ஒதுக்க வேண்டும். இன்றைக்கு இந்த சபையில் நாலில் மூன்று பகுதியாக இருக்கும் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களுக்கு அதே விகிதாச் சாரப்படி நாலில் மூன்று பங்கு நேரத்தை காங்கிரஸ் அங்கத்தினர்களுக்கு பேசுவதற்கு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்பது பாயின்ட் ஆப் இன்பர்மேஷனு அல்லது பாயின்ட் ஆப் ஆர்டரா என்று அறிய விரும்பிகிறேண்.

SRI P. G. MANICKAM : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்.

MR. SPEAKER : ஒவ்வொரு அங்கத்தினருக்கும் பேசுவதற்குள்ள நேரத்தை தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு சபாநாயகருக்கு இருக்கிறது. அந்த அதிகாரத்தை நீங்கள் எனக்கு அளித்திருக்கிறீர்கள். ஒவ்வொரு அங்கத்தினருக்கும் பேசுவதற்கு நேரம் கொடுக்கப் பட வேண்டியது சபாநாயகருடைய கடமை. ஒரு கட்சிக்கு அதிகமான நேரமும் இன்னொரு கட்சிக்கு குறைவான நேரமும் ஒதுக்க வேண்டும் என்பது எனது விருப்பமல்ல. எல்லா கட்சிக்காரர்களுக்கும் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டுமென்பதுதான் என் விருப்பம். அவ்விதம்தான் நான் பேசுவதற்கு உரிமையும் கொடுத்து வருகிறேன். இதுதான் பாயின்ட் ஆப் இன்பர்மேஷனுக்குள்ள பதில். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டால் வேறு பதில் சொல்லுகிறேன்.

V.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

11-10 a.m. **SRI A. S. SAHAJANANDA :** கனம் சபாநாயகர் அவர்களே, சட்ட சபையை மவுண்டு ரோடு "கவர்ன்மெண்ட் எஸ்டேட்டிலிருந்து" இங்கு மாற்றியிருப்பது எல்லோருக்கும் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மவுண்டு ரோடில் சட்டசபை இருந்தபொழுது அங்கத்தினர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் சௌகரியமாக இருந்தது. அங்கே அநேக வசதிகள் இருந்தன. இங்கே அப்படியில்லை. இங்கு சபை முடிந்ததும் சாப்பாடு கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. நான் இரண்டு, மூன்று நாட்களாக சாப்பிடவே முடியவில்லை. இங்கு சாப்பாடு ஹோட்டலே கிடையாது. சபை முடிந்ததும் சாப்பாட்டுக்கு ரொம்பவும் திண்டாட்டமாக இருக்கிறது. மவுண்டுரோடில் பொதுமக்கள் காலரியில் சௌகரியமாக உட்கார்ந்து சபையின் நடவடிக்கைகளை கவனிப்பதற்கு இட வசதி இருந்தது. மற்ற சமயங்களில் வெளியில் மரத்து நிழலில் தங்கியிருப்பதற்கும் சௌகரியமாக இருந்தது. இவ்விடத்தில் பொது மக்கள் பாஸ் வாங்குவதற்கு வெளியே வெயிலில் 'கியூ' வரிசையில் நிற்கவேண்டியிருக்கிறது. பொது ஜனங்களுக்கு தங்குவதற்கு இடமில்லை. இங்கே மெம்பர்களுக்கும் தங்குவதற்கு சௌகரியமான இடம் கிடையாது. அங்கே லைப்ரரி முதலான பல இடங்கள் வசதியாக இருந்தன. ஆகையால் சபையை இங்கே மாற்றியது ரொம்பவும் சரியல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம்.

நான் 32 வருஷகாலமாக இந்தச் சபையின் அங்கத்தினராக இருக்கிறேன். ஏற்கனவே இங்கு சபை இருந்தபொழுது கவர்னர் அவர்கள் சபைக்கு சுற்றிவராமல் நேராக முன் பக்கமாக வருவார்கள். அதை மாற்றியதும் ஒரு ஜோஸ்யர், சபை இங்கே நிலைக்காது என்று சொன்னர். சபை பிறகு **Commander-in-Chief** ரோடில் கூடியது. பிறகு "செனட் ஹவுஸில்" சபை கூட்டங்கள் நடந்தன. போன வருஷம் மவுண்டுரோடில் சட்ட சபைக்கு கவர்னர் பின்புறமாக அழைத்து வரப்பட்டார். அப்பொழுதே அந்த சபைக்கு அழிவு காலம் வந்துவிட்டது என்று நினைத்தேன். இப்பொழுதும் கவர்னர் பக்கவாட்டில் சுற்றி அழைத்துவரப்பட்டார். சபையை இங்கு மாற்றுவதற்கு முன்னல் அங்கத்தினர்களின் சௌகரியத்தையும் பொது மக்களின் சௌகரியத்தையும் கவனிக்கவேண்டும். மந்திரிகளுக்கு கார், டெலிபோன் முதலிய எல்லா வசதிகளும் இருக்கின்றன. ஆபீஸர்களுக்கும் எல்லா வசதிகளும் இருக்கின்றன. அம்மாதிரி ஒரு வசதியும்